5. அரசினர் தீர்மானம்.

பேரவை விதி 41 (3)-ஐத் தளர்த்தல் குறித்து.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சட்டப்பேரவை விதி 41 (3)-ன் கீழ் இரண்டுக்கு மேற் பட்ட காரியங்களை எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதைத் தளர்த்தவேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. க. சுப்பு அவர்கள் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டுவருவார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: அவர்கள் உங்களுக்கு ஒரு கடிதம் எழுதுவதாகச் . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எழுதியிருந்தார்கள். முதல் அமைச்சர் அவர்களுக்கும், அவர்களுக்கும் இரண்டு பேர் களுக்கும் ஒத்துவந்துவிட்டது என்று நினைத்தேன். இப்போது அவர்கள் வரவில்லை. ஸோ, நாட் மூவ்ட்.

6. கவன ஈர்ப்பு.

(அ) மதுரை மாநகராட்சியில் பணியாற்றும் அதிகமான தொழில் பழகு ஆசிரியர்கள் முறையாக வேலையில் அமர்த்தப்படாமை குறித்து.

THIRU K. T. K. THANGAMANI: Mr. Deputy Speaker, Sir, under Rule 41 of the Assembly Rules I call the attention of the Hon. Minister for Education and Local Administration to a matter of urgent public importance, namely, the delay in regularising a large number of Apprentice Secondary Grade Teachers in the Madurai Corporation Schools and the consequent unrest among them.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர் களே, 1970 அக்டோபரில் தொடங்கப்பட்ட தொழில் பழகு ஆசிரியர் திட்டத்தின் கீழ், மொத்தம் ஏறத்தாழ 5,746 ஆசிரியர்கள்